**வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களின் செயல்முறைகள்**

ந.க.எண். 1424/ஆ5 /2022, நாள்.22.11.2022

பொருள் : ரெட்கிராஸ் இயக்கம் – ஜெ.ஆர்.சி.ஆலோசகர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கம் நடைபெறுதல் – பள்ளியிலிருந்து ஒரு ஆலோசகர் தவறாது பங்கேற்கும் வகையில் விடுவித்து அனுப்ப கோருதல் – சார்பு.

பார்வை : ஜே.ஆர்.சி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் ஆலோசனையின் பேரில் வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு / நிதியுதவி / நகரவை / வனத்துறை / உயர் / மேனிலை / பள்ளி ஜெ. ஆர். சி ஆலோசகருக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கம் **23.11.2022,** புதன்கிழமை காலை **9.30** மணியளவில் வேலூர் காட்பாடி அனைவருக்கும் கல்வி திட்ட கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

ஒரு பள்ளிக்கு ஒரு ஆலோசகர் தவறாது பங்கேற்கும் வகையில் விடுவித்து அனுப்பிடுமாறு அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஜெ.ஆர்.சி முகாம் கட்டணம் ஒரு ஆசிரியருக்கு/ஆலோசகருக்கு ரூ.100/– வீதம் பள்ளியின் ஜெ.ஆர்.சி. தொகுப்பு நிதியிலிருந்து ஆலோசகர் / பொறுப்பாசிரியர் வசம் கொடுத்தனுப்புமாறு தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சியில் பங்கேற்க வரும் அனைவரும் ஜெ.ஆர்.சி. சீருடையில் முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்துக்கொள்ளும் வகையில் வருமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

முகாமில் பங்கேற்க வரும் ஆலோசகர் அனைவருக்கும் பிற்பகல் மதிய உணவு, தேனீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒம்/– மு.அங்குலட்சுமி)
மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை),
வேலூர்

பெறுநர்
தலைமையாசிரியர், அனைத்து வகை பள்ளிகள்,
சார்ந்த ஆலோசகர்கள் / பொறுப்பாசிரியர்கள், (தலைமையாசிரியர்கள் மூலமாக)
நகல் :
வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காகப்பணிந்தனுப்பலாகிறது.
நகல் :
உதவி திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வேலூர் மாவட்டம்
(முகாம் பணிகள் ஏற்பாடு செய்ய தெரிவிக்கப்படுகிறது)
திரு.செ.நா.ஜனார்த்தனன், மாவட்ட அமைப்பாளர் (முகாம் பணிகளை ஒருங்கிணைந்து செய்ல்பட தெரிவிக்கப்படுகிறது.)